REPORTING SECTION

1969 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அரசாங்க ஊழியர்களுக்குக் கிடைக்கும் பஞ்சப்படி போன்ற அலவன்சை மட்டும் கருதிச் செய்தால் அங்குள்ள மக்களுக்கு இதர வசதிகளையும் மேற்கொள்ள வேண்டிய நிலை இருக்கும். அப்படிப்பட்ட உத்தேசம் இப்போது இல்லை. அந்த அந்தப் பகுதிகளுக்கு நன்மை தரக் கூடிய தேவையான திட்டங்கள் நிதிநிலை இடம் கொடுக்கிற வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. வி. எஸ். எஸ். மணி : சென்னை நகரத்திற்கு அடுத்த படியாக இருக்கக் கூடிய நகரம் மதுரை. மதுரை நகராட்சியை மாநகராட்சியாக மாற்றும் உத்தேசம் உண்டா? அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கடந்த காலத்திலேயே ரத்தினசபாபதி குழுவினர் நகராட்சி மன்றங்கள் எதையும் மா நகராட்சி மன்றமாக மாற்றத் தேவையில்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்தையே இப்போதுள்ள அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

'லாய்ட்ஸ் எஸ்டேட்'டுக்கு நீர் விநியோகம்

* 29 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை லாய்ட்ஸ் ரோட்டிலுள்ள வீட்டு வசதி வாரி யத்தைச் சேர்ந்த குடியிருப்பில் தண்ணீர் சரியாக கொடுக்கப்பட வில்லை என்ற புகார் ஏதேனும் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்களிடமிருந்து வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) உறுப்பினர் லாய்ட்ஸ் எஸ்டேட்டில் உள்ள தமது அங்கனத்தில் (Flat) நீர்ப்பற்றுக்குறை இருப்பதாகத் தொலைபேசி மூலம் மாநில வீட்டு வசதி வாரியத்திற்குப் புகார் செய்தார்.

(இ) மாநில வீட்டு வசதி வாரியம் இது குறித்து மாநகராட்சி யுடன் கலந்து பேசியது. இப்பகுதிக்கு நீர் வழங்குவதை மேம்படுத்தும் பொருட்டு, நீர் வழங்கு பெருங்குழாய்களைக் கீழிறக்கி, மட்டப்படுத்தும் வேலையை மாநகராட்சி மேற்கொண் டுள்ளது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே குடியிருப்பவர்கள் எல்லாம் சர்க்கார் ஊழியர்களாக இருக்கிற காரணத்தினால் தற்போது கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு மட்டும் சமாளிக்க முடியாத நிலையில் சிரமப்படுகிறார் கள். வீட்டு வசதி வாரியம் கீழே குழாய்கள் அமைத்து தண் ணீர் கிடைக்க வசதி செய்தாலும் முதல் மாடி, இரண்டாவது

[1969 ஆகஸ்ட் 19

மாடியில் உள்ளவர்கள் தண்ணீருக்கு மிகுந்த சிரமப்படுகிறார்கள். ஆகவே விட்டுவசதி வாரியம் பெரிய கிணறுகளை எடுத்து மாடியில் உள்ளவர்களுக்கும் தண்ணீர் கிடைக்கும்படியாக பம்பு வைத்து இறைக்க தக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இப்போது தனியாகக் கிணறு வெட்டி, விசையேற்றம் வைத்து குழாய்கள் மூலமாக மற்ற காரியங்களுக்கு வேண்டிய தண்ணீர் தாராளமாக அளிக்கப் படுகிறது. குடிப்பதற்கு ஏற்ற தண்ணீர் மட்டும் தான் இப் போது இரண்டு லைன்கள் மூலமாக அளிக்கப்படுகிறது. மேலே தேக்கி வைத்து கொடுப்பது என்றால் ஒரு லைன் மூலமாகத்தான் அளிக்க முடியும். அப்போது இதைவிட கஷ்டம் ஏற்படும். பொதுவாக குடிதண்ணீர் பிரச்னை எல்லா இடங்களிலுமே இருக் கிறது. ஸோனல் ஸிஸ்டம் ஏற்படுத்தி தண்ணீர் சப்ளை செய்தா லொழிய தண்ணீர் கஷ்டம் தீருவது என்பது முடியாத நிலை மையில் இருக்கிறது.

திரு. கே. விநாயகம் : லாய்ட்ஸ் ரோடில் உள்ள ஹவுசிங் போர்டு காலனி மட்டும் என்ன—சைதாப்பேட்டையில் உள்ள டாட்டண்டர் நகர் காலனியிலும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது ஹவுசிங் போர்டு கீழே வருகிறதா, பி.டபிள்யூ.டி.யின் கீழே வருகிறதா ?

திரு. கே. விநாயகம் : பி.டபிள்யூ.டி.யின் கீழ் இருக்கும் காலனிக்குப் பின்னால் ஹவுசிங் போர்டு காலனி இருக்கிறது. நான் தெரிந்தே சொல்கிறேன். ஒரு வீட்டில் இருக்கிற தண்ணீரை பைப் மூலமாக அதிகாரம் இல்லாது பக்கத்துவீட்டில் இருப்பவர் கள் எடுத்துக் கொள்கிறார்கள் என்ற புகார் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அந்தமாதிரியான தகவல் என்னிடம் இல்லை.

Accounts of Sri Kapaleeswarar Devasthanam

* 30. *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether any defalcation in the accounts of Sri Kapalees-warar Devasthanams, Mylapore, Madras, has been reported during 1966-67 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.